## தலைப்பு 316 – வட மேல் மாகாண சபை - 2025

---

### 01. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயற்பணி

### 1.1 தூரநோக்கு

நிலையானதாக அபிவிருத்தியடைந்த வடமேல் மாகாணம்

### 1.2 பணிக்கூற்று

உலகளாவிய போட்டி சூழலில் திருப்திகரமான சமூகம், தகவமைப்பு பொருளாதாரம் மற்றும் பசுமையான சூழலை உருவாக்க, வடமேல் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், பௌதீக, நிதி மற்றும் மனித வளங்களை முகாமைத்துவம் செய்தல்.

### 1.3 செயற்பணி

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுதல்.

### 2. நிதிக்கூற்றுக்கள்
**தேறிய நிதியேற்பாடும் சேமிப்பும்**

மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 66,617 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 65,507.62 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,109.38 மில்லியன் அதாவது தேறிய நிதியேற்பாட்டில் 1.67 சதவீத அளவில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த மொத்த சேமிப்பில் ரூபா 516.75 மில்லியன் அதாவது 6.20 சதவீத அளவு மூலதன நிதிஏற்பாடுகளில் ஆக இருந்ததுடன் மீண்டெழும் நிதிஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 592.63 மில்லியன் அதாவது 1.02 சதவீதம் ஆகும். பாதீட்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த நிதிஏற்பாடு கட்டுநிதி வழங்குவதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு முடியாமையின் காரணமாக நிதிஏற்பாடு சேமிப்பு காண்பிக்கப்பட்டிருந்தது.

| செலவினம் | 2025.12.31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| மீண்டெழுபவை | 58,283.00 | 57,690.37 | 592.63 | 1.02 |
| மூலதனம் | 8,334.00 | 7,817.25 | 516.75 | 6.20 |
| **மொத்தம்** | **66,617.00** | **65,507.62** | **1,109.38** | **1.67** |

### 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.